[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 ஜனவரி 7

தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து அரசாங்கப் பள்ளிகளையும் நாங்கள் விரைவில் மேம்படுத்துவோம் என்பது உறுதி. அதனால், இந்த ஆளுநர் உரையில்–மிக மிக முக்கியத் திட்டமாக அனைத்து அரசுப் பள்ளிகளிலும் "ஸ்மார்ட் கிளாஸ்" என்கிற திட்டம்; அதாவது திறன்மிகு வகுப்பறைகள் உருவாக்குகின்ற திட்டம் வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டிலுள்ள 24 ஆயிரத்து 345 தொடக்கப் பள்ளிகளிலும் திறன்மிகு வகுப்பறைகள் தொடங்கப்படும். அரசுப் பள்ளிகள், அந்தப் பள்ளிகளின் வரலாற்றில், இது ஒரு மாபெரும் கல்விப் புரட்சியை உருவாக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகள், இந்தியாவிற்கே முன்னோடியாக செயல்படுகின்ற பெயரை எட்டிட இந்த அரசு தனது அனைத்து சக்தியையும் பயன்படுத்தும் என்பதை நான் உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

இன்னொரு மிக முக்கியமான உயிர் காக்கும் திட்டம், "இன்னுயிர் காப்போம்–நம்மைக் காக்கும் 48 திட்டம்" ஆகும். அது உங்களுக்குத் தெரியும். சாலை விபத்துகளில் சிக்கி, பாதிக்கப்படுகிற விலைமதிப்பற்ற உயிர்களை காக்கக்கூடிய உன்னதமான திட்டம். தமிழ்நாட்டில் எந்த மூலையில் ஒருவர் விபத்துக்குள்ளானாலும், அது மற்ற மாநிலத்தவரானாலும், ஏன், வேறு நாட்டைச் சார்ந்தவராக இருந்தாலும், முதல் 48 மணி நேர சிகிச்சையை இந்த அரசே ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய கருணைமிக்க திட்டம். கருணையையே தன்னுடைய பெயரிலே கொண்ட முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் அரசு அல்லவா இது! (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அத்தகைய கருணை உள்ளத்தோடு இந்தத் திட்டத்தை நாங்கள் தீட்டியிருக்கிறோம். இந்தத் திட்டத்தின்கீழ், 609 மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டு, இதுவரை 5,274 பேர் அவசர சிகிச்சைகளைப் பெற்று பயனடைந்திருக்கிறார்கள். விபத்தில் சிக்குகிறவர்களுக்கு "ஒரு கோல்டன் திட்டம்" இது என்பது மட்டுமல்ல; மனித உயிர், மனித உரிமை இரண்டையும் இந்த அரசு இரு கண்கள்போல் காத்து வருகிறது என்பதற்கு மேலும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ள திட்டம் இது.

மேலும், பருவ மழையும், திடீர் மழையும் தமிழகத்தை விட்டு வைக்கவில்லை. சமீபத்தில் சென்னையில் ஒரே நாளில் இரண்டு முறை கனமழை கொட்டித் தீர்த்திருக்கிறது. கொட்டித் தீர்த்தது